
www.nilafrance.com

# நிலா

இது ஓர் இலவச வெளியீடு
(மூவாயிரம் பிரதிகள்)

வைகாசி - ஆனி 2011 | இது கிருஷ்ணா அச்சகத்தின் ஓர் விளம்பர வெளியீடு | இல. 9











## பிரான்சில் வேலையற்றோர் தொகை குறைகின்றது.

பிரான்சில் ஏப்ரல் மாதத்தில் வேலைஅற்றோர் என பதிபவர்களின் எண்ணிக்கை 6300 பேரால் குறைவடைந்துள்ளது.

இது அண்ணளவாக 0.2 வீதமாகும். தொடர்ந்து நான்கு மாதங்களாக வேலைஇல்லாதோர் எண்ணிக்கை குறைந்து வருகின்றது.

இதையிட்டு அரசு மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. வேலையற்றோர் பிரச்சனையில் இருந்து விடுபடமுடியும் என்று பொருளாதார வல்லுனர்களும் அரசும் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

பிரான்சில் ஒரு வேலையும் இல்லாதவர்களை தரம் A எனவும் நிரந்தரமற்ற வேலையில் இருப்பவர்களை தரம் B எனவும் போல் எம்புளுவா தரம் பிரித்து வைத்துள்ளது. 25 வயதிற்கு குறைவானவர்களுள் தரம் A இன் எண்ணிக்கை உயர்ந்து வருகின்றது. இவர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வுகாண தனியான திட்டங்கள் தீட்டப்படுகின்றது என அரசு தெரிவிக்கின்றது.

2009ம் ஆண்டு ஏப்ரலில் 60000 வேலையற்றோர் பதிந்திருந்தனர் என்றும் இதுவே மோசமான காலகட்டம் என்றும் போல்-எம்புளுவா தெரிவித்துள்ளது. அத்துடன் பெண்களிடமும் 50 வயதிற்கு மேற்பட்ட வயோதிபர்களிடமும் வேலையில்லாப் பிரச்சனை கூடுதலாக இருக்கின்றது. இது 0.9 வீதத்தினால் வளர்ச்சியடைந்து வருகின்றது.

இரண்டு வருடங்களுக்கு கூடுதலாக ஒருவர் வேலை இல்லாமல் இருக்கின்றபோது அவரின் பொருளாதார நிலைமை சீரழிகின்றதாகவும் இவ்வாறான ஒருவர் திரும்ப வேலை ஒன்றை எடுப்பதில் பல்வேறு சிரமங்களை கூடுதலாக எதிர்நோக்கவேண்டி இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. இவ்வருட முடிவில் பிரான்சில் வேலையற்றோர் எண்ணிக்கை 9.1வீதமாக இருக்கும் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

வேலை இல்லாமல் இருப்போர் ஜேர்மனியில் 7.6வீதமாகவும் இங்கிலாந்தில் 7.7வீதமாகவும் அமெரிக்காவில் 9வீதமாகவும் இருக்கின்றது. ஆனால் ஸ்பெயினில் தற்போது 21வீதமாகவும் 25வயதிற்கு உட்பட்டவர்களுள் 44.6வீதமாகவும் வேலையற்றோர் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

(YB)

## 2010 இல் பிரான்சில் அகதி அந்தஸ்து பெற்றவர்களில் இலங்கையரே அதிகம்!

2010 இல் பிரான்சில் அகதி அந்தஸ்து பெற்ற 8447 பேரில் இலங்கையை சேர்ந்தவர்களின் எண்ணிக்கை தான் அதிகம். இலங்கையைச் சேர்ந்த 1529பேர் 2010இல் அகதி அந்தஸ்து பெற்றுள்ளனர். அடுத்து ரூசியாவைச் சேர்ந்த 802 பேரும், கொங்கோ நாட்டைச் சேர்ந்த 498 பேரும் புகலிடம் பெற்றுள்ளனர். மொத்தமாக 2010இல் 52000 பேர் புகலிடம் கோரிய போது (இதில் 44957 பேர் முதல் தரம்) அதில், 8447 பேருக்குத்தான் புகலிடம் வழங்கப்பட்டுள்ளது.
உயர்கல்விக்கான 2010 வருகையில் சீனா மாணவர்களின் எண்ணிக்கை 10359 ஆகும். இதை அடுத்து மொறக்கன் 5739 பேரும், அமெரிக்கன் 5608 பேரும் ஆவர். இவர்கள் கல்விக்காக வருடம் 44794 - 65842 யூரோக்களை செலவு செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(PR)



# கிருஷ்ணா அச்சகம்

**தரம் - குறித்த தவணை - நியாயவிலை**

திருமண, பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள்,
வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும்,
மொழிபெயர்ப்பு தேவைகளுக்கும் நாடுங்கள்!


☎: 01 42 51 29 92   Fax : 01 42 51 35 25

E-mail: krishnafrance@yahoo.com



73, Rue Doudeauville - 75018 PARIS (Métro : Château Rouge)

# பிரான்சின் முதலாவது இடதுசாரி ஜனாதிபதி




*1981ம் ஆண்டில், 30 ஆண்டுகளுக்கு முன்னதாக பிரான்சில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பிரான்சுவா மித்திரண்ட் (François Mitterand) முதன்முறையாக இடதுசாரி ஜனாதிபதியாகப் பதவியேற்றார். தொழில்நுட்பம் பாரிய வளர்ச்சி அடைந்து வருகின்ற வேளையில் தொழிலாளரின் வாராந்த 40 மணி நேர வேலைநேரத்தை 35 மணிநேரமாக குறைக்க தேர்தல்வாக்குறுதி அளித்து சட்டமூலமாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டார். தனது சோசலிசக் கட்சி சார்பில் பல முன்னேற்றகரமான திட்டங்களை நடைமுறைப்படுத்தினார்.*

***இனப்பிரச்சினை - போர் காரணமாக இலங்கையில் இருந்து அகதிகளாக புறப்பட்டு பல ஐரோப்பிய நாடுகளில் தமிழ் அகதிகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்ட வேளையில் இவரது அரசாங்கம் இலங்கைத் தமிழ் மக்களுக்கு அரசியல் அந்தஸ்து வழங்கவேண்டிய கடப் பாட்டை உணர்ந்து உறுதியான முடிவை எடுத்தது.*** *அத்துடன் 10 வருடம் நிரந்தர வதிவிட அந்தஸ்து இல்லாமல் இருந்தவர்கட்கு நிரந்தர வதிவிட அந்தஸ்து கொடுப்பதற்கும் இவருடைய ஜனாதிபதி காலத்திலேயே சாதகமான முடிவெடுக்கப்பட்டதும் வெளிநாட்டு மக்களைப் பொறுத்தவரை முக்கியமான விடயமாகும்.*

*10 மே 1981 இல் பிரான்சில் சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலம் இடதுசாரி ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப் பட்டமை, சர்வதேச ஊடகங்களில் ஓர் அதிர்வை ஏற்படுத்தியதாக அவ் வேளையில் வர்ணிக்கப்பட்டது. எனினும் அமெரிக்க நியூஸ் - வீக் (News Week) சஞ்சிகை, சீனா, சோவியத் யூனியன், கியூபா போன்ற நாடுகளில் உள்ளமை போன்ற மாதிரி அரசுகளையே இவ் அரசும் பின்பற்றும் என்று புலம்பிக் கொண்டிருந்தது. ஆனால் ஜனாதிபதி பிரான்சுவா மித்திரண்ட் அவர்களின் சகாப்த்தம் பிரெஞ்சு மக்களுக்கும் இந்நாட்டில் வாழ்கின்ற வெளிநாட்டு மக்களுக்கும் ஆறுதலையும் உதவி யையும் வழங்கிய அரசாகவே பார்க்கப்படுகின்றது. படத்தில் பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா மித்திரண்ட் சீனப் பெருஞ்சுவரைப் பார்க்கச் சென்ற வேளையில் எடுத்த படத்தையே காண்கின்றீர்கள்.*

(YB)


www.nilafrance.com

நிலா பற்றிய உங்கள் அபிப்பிராயங்கள், மற்றும் தொடர்புகளுக்கு

சங்கீதா அச்சகம் - லாச்சப்பல்


**மனமகிழ்வுடனும் முழு ஈடுபாட்டுடனும் செய்யப்படும் வேலை ஒரு அழகான அனுபவம்** - பேர்ள் எஸ். பக்




*16 வயதிற்கும் 19 வயதிற்கும் இடைப் பட்ட பாரிசில் உள்ள மாணவர்களில் 24வீதமானோர் சிகரட் புகைப்பவர் களாகவோ அல்லது சிகரட் புகைத்தவர் களாகவோ இருக்கின்றனர். மாணவர் களை விட மாணவிகள் புகைக்கும் வீதம் 1வீதத்தினால் கூடுதலாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.*

*பல்கலைக் கழகம் போன்ற மேற்படிப்பிற்கு செல்வதற்கு முன்னர் கல்லூரியில் (Lycée) படிக்கின்ற மாணவர்களுள் புகைத்தல் 2005ம் ஆண்டில் இருந்து 5வீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.*

(YB)

# புகையிரதபாதையில் திருட்டு!



*பிரான்சின் 30000கி.மீ புகையிரத பாதையை பாதுகாப்பதில், ஹெலி கொப்ரர்கள் பயன் படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.*

*புகையிரத பாதையில் உள்ள உலோகப் பொருட்களின் (அலுமினியம், செப்பு, ஈயம்..) திருட்டால், வருடம் 350000 நிமிடங்கள் தாமதம் ஏற்படுகின்றது. இதனால் 4 கோடி யூரோ இழப்பு ஏற்படுகின்றது. இதைத் தடுக்க வருடம் 100 மணிநேர பறப்பு கொண்ட ஹெலிப் பயன்பாடு, 30000 கி.மீ துாரத்துக்கு போதுமானதல்ல என்று கூறப்பட்ட போதும், இந்த பாதுகாப்புமுறை நடைமுறைக்கு வந்துள்ளது.*

*கிழமைக்கு 50இற்கு மேற்பட்ட திருட்டுகள் புகையிரதத்தை இணைக்கும் வலைபின்னலில் நடக்கின்றது. இது 2009இற்கும் 2010இற்கும் இடையில் 180 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.*

(YB)



# மன அழுத்தத்தின் உச்சத்தில் இளம் தாய்மார்

குழந்தை பிறந்த நாளிலிருந்தே தாயானவள் மேலதிக அழுத்தத்திற்கு உள்ளாகிறாள்.
தாயின் இந்த மனஅழுத்தம் பிள்ளையையும் பாதித்து பிள்ளையும் மன அழுத்தத்திற்கு உள்ளாகிறது என்ற உண்மை பலருக்குத் தெரிவதில்லை. இவ் அழுத்தம் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் பாதிக்கிறது.

பிள்ளையின்மீது தாய்க்கு இருக்கக்கூடிய அன்பில் துளியேதும் சந்தேகமில்லை. ஆனால் பிள்ளைகளின் உளரீதியான நெருக்கடிகளை புரிந்துகொள்ள முடியாத தாய் பிள்ளையையும் துன்புறுத்தி தானும் துன்பத்திற்கு உள்ளாகிறாள்.

குழந்தைகளுடன் அவதிப்படும் இளம் தாய்மார் அதிக நித்திரையை இழக்கநேரிடுகிறது. அடுத்த நாட்களிலும்கூட இந்த இழப்பை ஈடுசெய்ய முடியாத தாயின் அழுத்தம் இன்னும் அதிகமாகிறது.

மனஅழுத்தத்தில் உளலும் தாய் தனது கணவனுடனும் அதிக சச்சரவுக்கு உள்ளாக நேர்கிறது.
இது குடும்ப அமைதியை குலைக்கிறது.

ஒவ்வொரு இளம் பெண்ணும் தான் ஒரு முன்மாதிரித் தாயாகவே இருக்க கனவுகாண்பாள். ஆனால் யதார்த்தம் அப்படி அமைவதில்லை. இதுகூட அவளுக்கு வாழ்க்கையில் பிடிப்பின்மையையும் தேவையற்ற மன அழுத்தத்தையும் கொடுக்கிறது.

ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு வகையான சிந்தனை எண்ணப்போக்குகளைக் கொண்டிருக்கும்.
இது கூட பிள்ளைவளர்ப்பில் தாய்க்கு சிரமத்தை கொடுக்கிறது.

பிரான்சில் மன அழுத்தத்திற்கு உள்ளாகும் தாய்மாரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இவ்வகையான உளைச்சலில் தவிக்கும் தாய்மார் உளநலஆலோசனை பெறுவது நல்ல பயன்தரும்.
மேலதிக விபரங்களுக்கு
www.alloparentsbebe.org

(Mn)


கான் திரைப்பட விழாவில் மனைவியுடன் பெல்மொன்டோ

# பிரெஞ்சு நடிகர் பெல்மொன்டோ

பிரெஞ்சு மக்களால் மிகவும் விரும்பப்படுபவரும் புகழ்பெற்றவருமான நடிகர் ஜோன்-போல் பெல்மொன்டோ அவர்களுக்கு 17.05.2011 இல் கான் திரைப்படவிழாவில் ஓர் பாராட்டு விழா நடைபெற்றது.

அவரின் 50 ஆண்டுகால கலைத்துறைப் பணியை பாராட்டுமுகமாக இவ்விழா ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. 78 வயது நிரம்பிய பெல்மொன்டோ 10 வருட இடைவெளியின் பின்னர் «ஜோன்-போல் பெல்மொன்டோ நடந்துவந்த பாதை» என்ற விபரணச் சித்திரத்தில் நடித்திருந்தார் .

தமிழ்நாட்டில் மக்களிடையே மிகவும் புகழ்பெற்ற எம்.ஜீ.ஆர் போன்று பிரான்சில் பெரும்புகழ்பெற்ற திரைப்பட நடிகராகத் திகழ்ந்தவர். இவருக்கு ஒஸ்கார் பரிசு கிடைக்காவிட்டாலும் பாராட்டு விழாவில் மாபெரும் ஆரவாரத்துடன் கூடிய வரவேற்பளிக்கப்பட்டு புகழாரம் சூட்டப்பட்டார் .

D'A bout de souffle, l'homme de Rio, L'as des as என்பன பத்துவருட இடைவேளையின் முன்னர் நடித்த முக்கிய படங்களாகும்.

(YB)

# பாரிஸ் 15ல் குப்பைகளை தரம்பிரிக்கும் நிலையம்




மறுசுழற்சிக்காக பாரிஸ் 15 இல் முதன் முதலாக குப்பைகளை தரம்பிரிக்கும் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இது பாரிஸ் 14 இன் ஒரு பகுதியை உள்ளடக்கிய வண்ணம், இயங்கத் தொடங்கியுள்ளது.
மறுசுழற்சி மூலமான உற்பத்தி சுற்றுச்சூழலை மட்டுமின்றி, இயற்கை வளங்களை பாதுகாப்பதையும் அடிப்படையாகக் கொண்டது.

இந்த வகையில் சில உதாரணங்கள்.

7000 சஞ்சிகை அல்லது பத்திரிகை மூலம் ஒரு தொன் மறுசுழற்சி பேப்பர் மீளக் கிடைக்கின்றது.

10 கிலோ இரும்பு மூலம், சுப்பர் மாக்கற் வண்டி செய்யப்படுகின்றது.

600 அலுமினியத்தை கொண்ட கனற் (யூஸ் ரின்) மூலம் ஒரு சைக்கிள் செய்யப்படுகின்றது.

14 தண்ணீர் (பிளாஸ்ரிக்) போத்தல் மூலம் ஒரு பொலிஸ்ரர் சுவற்றர் செய்யப்படுகின்றது.

ஒரு காட்டூன் பெட்டி மூலம் 4 சிறிய உணவுப் (céréales) பெட்டி செய்யப்படுகின்றது.

9600 சிறிய பிளாஸ்ரிக் போத்தல் மூலம் 120 லீற்றர் கொண்ட 20 தரம்-பிரிக்கும் பெட்டி செய்யப்படுகின்றது.

176 உணவு பதார்த்தத்தை பதப்படுத்தி அடைக்கும் ரின் மூலம், 19 எறிந்து விளையாடும் பந்து (boules de pétanque) செய்யப்படுகின்றது.

இன்னும் இது போல், நாம் அன்றாடம் பாவிக்கும் பல பொருட்கள், நாம் எறியும் பொருட்களில் இருந்து மீள் உற்பத்தியாகின்றது.

எனவே பொருள்களை தரம் பிரித்து, மறுசுழற்சிக்கேற்ற வகையில் குப்பையில் இட அனைவரும் பொறுப்புணர்வுடன் செயல்படுவது அவசியமானது.

(PR)



# பாடசாலை கன்ரீனில் இயற்கை(Bio) உணவுகள்

பாரிஸ் மாகாணத்தின் 9 தனியார் பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவக் குழந்தைகளுக்கு கன்ரீனில் பரீட்சார்த்தமாக இயற்கை உணவுகளை வழங்கும் நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுகளில் 90வீதமானவை இயற்கையான உணவுகளாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் ஒரு உணவின் விலை 10யூரோக்களுக்கு கூடுதலாக முடிகின்றது. நினைத்துப் பார்க்க முடியாத அளவில் விலை இருப்பதால் தற்போது தனியார் பாடசாலைகளில் தான் பரீட்சிக்கப்படுகின்றது. உணவின் விலை அதிகம் கூடாமல் இருப்பதற்காக கிழமைக்கு ஒருநாள் மரக்கறி உணவாக வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் இயற்கை உணவுகளை தேவைக்கேற்ற அளவில் களஞ்சியப் படுத்துவதில் கூடிய பிரச்சினைகள் இருப்பதாகவும் அதற்கான சரியான வழிமுறைகள் நாளடைவில் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பழவகைகள் சாப்பாடு கொடுப்பதற்கு சற்று முன்னரே வெட்டி பரிமாற தயார் செய்வதாலும் உணவின் விலை உயர்கின்றது.

ஆரம்பத்தில் இத்திட்டத்தை ஆராய்ந்தபோது கற்பனையில் மட்டுமே காணப்படக்கூடிய நடைமுறைக்குச் சாத்தியமற்ற திட்டமென்று பலரும் சிரித்தனர். ஆனால் இன்று 9 பாடசாலைகளின் கன்ரீன்களில் தலா 300 குழந்தைகளுக்கு உணவு நாளாந்தம் பரிமாறப்படுகின்றது. இத்திட்டம் மேலும் மேம்படுத்தப்படும்போது, எங்கள் கன்ரீன் இப் பூமிப்பந்திற்கானதாக அமையும் என்றும் கூறப்படுகின்றது.
« Nos cantines pour la planète »

(YB)



# யூரோவும் பிரெஞ்சு மக்களும்!

பிரெஞ்சு நாட்டினரின் பணம் பிராங்குகளில் இருந்து யூரோவுக்கு மாறிய பின்னர், பொருட்களின் விலை ஏற்றத்திற்கு காரணம் யூரோ என பெரும்பான்மையினர் கருதினர் எனஅண்மையில் வெளியான கருத்துக் கணிப்பின்படி லு பரிசியன் (Le Parisien) பத்திரிகையில் செய்தி வெளி வந்துள்ளது. இதன் கணிப்பிற்கிணங்க 67வீதமான மக்கள் யூரோ பணத்தை ஏற்று கருத்து தெரிவித்துள்ளனர்.

எனினும் 30 வீதமான மக்கள் பிராங்குகள் தங்கள் நாணயமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர். 09.05.2011 இல் யூரோ நாணயத்திற்கான நாள் கொண்டாடப் பட்ட வேளையில் கருத்துக் கணிப்புகள் வெளியாகியுள்ளன. இந்த 30வீதமான மக்கள் தாங்கள் யூரோ நாணயத்தில் மாற்றத்தை எதிர்பார்ப்பதாகவும் கருத்துக் கணிப்புக்கள் ஏமாற்றத்தைதந்துள்ள தாகவும் தெரிவித்துள்ளனர்.

(YB)

## ஐரோப்பிய அணு நிலையங்கள்




மூட்டை தூக்கும் பொழுது பாரத்தினாலே நான் கஷ்டப்பட்டிருப்பேனே தவிர, வெட்கத்தினால் ஒருபோதும் கஷ்டப்பட்டதில்லை

\- தந்தை பெரியார்

ஐரோப்பாவில் மொத்தமாக 195 அணு நிலையங்கள் காணப்படுகின்றன இவற்றுள் 143 அணு நிலையங்கள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் உள்ளன. 58 அணுவாலைகள் பிரான்ஸ்சிலும் 32 அணுவாலைகள் ரஸ்சியாவிலும் 17 அணுவாலைகள் ஜேர்மனியிலும் 15 அணுவாலைகள் உக்கிரையினிலும் காணப்படுகின்றன.

(YO)

ரூபி அச்சகம்

உங்கள் மழலைகளின் வண்ண வண்ண போஸ்ரர்கள், மற்றும் உங்கள் வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய போஸ்ரர்களை பதிப்பித்துக்கொள்ள எம்மை நாடுங்கள் !




10, RUE LABAT- PARIS 18
M°: Marcadet Poissonniers
Tél.: 01 42 51 80 78

# கட்டாயக் காப்புறுதி அவசியமில்லை




தன்னிச்சையாக இயங்க முடியாமல் ஒருவரில் தங்கி வாழ்கின்றவர்கட்கு கட்டாயக் காப்புறுதியை செய்ய வேண்டிய நிலையைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளில் பிரான்சின் சமுக மேம்பாட்டு அமைச்சர் றொஸ்லின் பச்லோ (Roselyne Bachelot) ஈடுபட்டுள்ளார். தற்போது 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் தனியார் மேலதிகக் காப்புறுதி செய்தல் வேண்டும் என நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இந்த நிலையை மாற்றி அமைக்க வேலை செய்வோரின் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படும் CSG என்ற ஒய்வூதியப் பணத்தை 0,10 வீதத்தினால் கூட்டுதல் மூலம் பற்றாக்குறையை ஈடுசெய்யலாம் என ஆலோசிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தின் மூலம் வருடாந்தம் 1,3 மில்லியாட் (130 கோடி) யூரோக்கள் கூடுதலாக அரசு பெறும் என கணிப்பிடப் படுகின்றது. தற்போது வயதானவர் ஒருவர் தங்கள் வீட்டில் வாழும்போது 1000 யூரோக்களும் தனியார் ஓய்வுவிடுதியில் வாழும்போது 2000 யூரோக்களும் செலவாகின்றதென்று தெரிவிக்கப்படுகின்றது.

பிரான்சில் உள்ள 340,000 பேருக்கு வருடாந்தம் 2 மில்லியாட் (200 கோடி) யூரோக்கள் தனித்தியங்க முடியாதவர்களைக் கவனிக்க செலவு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையிலேயே இப் பிரச்சினைக்கு மாற்றுத் தீர்வு காண்பதற்காக சமூக மேம்பாட்டு அமைச்சர் ஆலோசனையில் இறங்கியுள்ளார்.

(YB)

# துயர் பகிர்வு



தோற்றம்: 17.09.1966
மறைவு: 18.05.2011
அமரர் செல்லத்தம்பி கிருஷ்ணகுமார்



தோற்றம்: 22.06.1957
மறைவு: 02.04.2011
அமரர் பேசன் ரவீந்திரராஜா



தோற்றம்: 22.07.1958
மறைவு: 29.04.2011
அமரர் சுப்பிரமணியம் லோகேந்திரன்



தோற்றம்: 19.11.1935
மறைவு: 09.05.2011
அமரர் சின்னத்துரை லக்சுமி



தோற்றம்: 10.04.1922
மறைவு: 30.05.2011
அமரர் தம்பிப்பிள்ளை அருளம்பலம்



தோற்றம்: 20.10.1964
மறைவு: 03.05.2011
அமரர் சரபநடராஜசிங்கம் சர்வலோகதயாபரன்



தோற்றம்:
மறைவு: 06.05.2011
அமரர் இராசையா கனகரத்தினம்



தோற்றம்: 19.08.1987
மறைவு: 19.05.2010
அமரர் கிருபா தியாகராஜா



தோற்றம்: 29.11.1958
மறைவு: 11.06.2010
முதலாம் ஆண்டு நினைவு
அமரர் சுப்பிரமணியம் குமாரவேள்



தோற்றம்: 11.03.1934
மறைவு: 17.04.2011
அமரர் சந்திரவதனா இராசையா



தோற்றம்: 14.12.1949
மறைவு: 25.05.2011
அமரர் கனகசபை கனகேந்திரம்



தோற்றம்: 05.01.1985
மறைவு: 18.04.2011
அமரர் கிருஸ்ணமூர்த்தி றொபின்சன்

# பிரான்சில் சிறைக் கைதிகள் அதிகரிப்பு!



ஏப்பிரல் முதலாம் திகதி 2011 இல் பிரெஞ்சு சிறைச்சாலைகளில் 64148 பேர் குற்றங்களுக்காக சிறைத் தண்டனையை அனுபவிக்கின்றனர். இது 2011 ஜனவரி முதலாம் திகதியை விட 6 சதவீதத்தால் அதிகமாகும்.


இதில் சிறுவர் குற்றவாளிகளாக மாறும் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கின்றது.
6 சதவீதத்தில் 1.3 சதவீதம் சிறுவர் குற்றவாளிகள். 804 பேர் கொண்ட இந்த குற்றவாளிகளின் எண்ணிக்கை தை முதலாம் திகதிக்கும் ஏப்பிரல் முதலாம் திகதிக்கும் இடையில் 16.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

பிரெஞ்சு சிறைகளில் 56150 பேருக்கே இடமிருந்த போதும், 7998 பேர் மேலதிகமாக அடைக்கப்பட்டுள்ளனர். இது 11.4 சதவீதம் அதிகமாகும். 2008 யூலையுடன் ஒப்பிடும் போது 12.6 சதவீதம் அதிகமாகும்.

மொத்தமாக 191 சிறைச்சாலை உள்ள அதே நேரம், இதில் 109, தீர்ப்பு வழங்கப்படாத கைதிகளை அடைக்கும் விளக்க மறியலாகும்.

(PR)

# ● பிரான்சில் வெளிநாட்டவர்




பிரெஞ்சு ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடிக்க, வெளிநாட்டவர் பிரச்சினை முதன்மை பெறுகின்றது. தேர்தலில் இது வாக்கு வங்கியை தீர்மானிக்கும் காரணியாகின்றது. இந்த வகையில் வெளிநாட்டவர் பற்றிய தகவல்கள் வெளிவருகின்றது.

2005க்கும் 2010க்கும் இடையில் வெளிநாட்டவர் பிரான்சை வாழ்விடமாக கொண்ட சட்டபூர்வமான வருகை 9.2 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2005 இல் 185988 பேர் வருகைதந்த போதும், இது 2010 இல் 203017 பேராக அதிகரித்துள்ளது. இதில் குடும்பம் மற்றும் அகதி அந்தஸ்து கேட்போர் தொகை குறைந்து, உயர்கல்வி மற்றும் உயர்தர தொழில் சார்ந்தோரின் வருகை அதிகரித்துள்ளது.

இது பற்றி தரவுகள்

| வெளிநாட்டவர் வரவு | 2005 | 2010 | அதிகரிப்பு சதவீதத்தில் |
|---|---|---|---|
| பொருளாதார வரவு | 24293 | 31532 | 29.8 |
| குடும்ப இணைவு | 94383 | 84126 | 10.9 |
| உயர்கல்வி | 44794 | 65842 | 47 |
| அகதி அந்தஸ்து | 12002 | 8447 | 29.6 |

பிரெஞ்சு உயர் பொருளாதாரம் சார்ந்த வருகையாக, வெளிநாட்டவர் வருகை இன்று மாறி வருகின்றது.

(PR)

# பாரிஸில் தமிழர் நிகழ்வுகள்

**● வித்தியாலய விழா - 2011**

வேலணை மத்திய மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம் பிரான்ஸ் கிளை நாடத்திய வித்தியாலய விழா 03.04.2011 அன்று பாரிசில் நடைபெற்றது.

**● நூல் வெளியீட்டு விழா**

மூத்த எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் அவர்களின் லெனின் பாதச் சுவடுகளில் எனும் நூல் வெளியீட்டு விழா 8.5.2011 அன்று Paris, Aubervillers இல் இடம்பெற்றது.

**● தேசியக்கலைமாலை 2010**

தமிழ்அரங்கு - பிரான்ஸ் தமிழர் கலை கலாச்சார ஒன்றியம் இணைந்து நடாத்திய தேசியக் கலைமாலை 2010 கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வு 15.05.2011 அன்று Bondy இல் இடம்பெற்றது.

**● மகளீர் விழாவும், அன்னை தெரசா நூற்றாண்டு விழாவும்**

பாரிஸ் கம்பன் கழகம் நடாத்திய மகளீர் விழாவும், அன்னை தெரசா நூற்றாண்டு விழாவும் 28-05-2011சனிக்கிழமை Garges Sarcelles இல்நடைபெற்றது.

**● கலைக்கோவில் விழா-2011**

வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் பழைய மாணவர் சங்க பிரெஞ்சுக் கிளை நடாத்திய கலைக் கோவில் விழா 05.06.2011 இல் Paris இல் இடம்பெற்றது.

# கிரிக்கெற் வீரர் வார்னுக்கு சிலை



ஆஸ்திரேலியாவின் சுழல் ஜாம்பவான் வார்னுக்கு, மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் (எம்.சி.ஜி.,) விரைவில் சிலை வைக்கப்படுகிறது.
ஆஸ்திரேலிய அணியின் சுழற் பந்து வீச்சு வீரர் ஓய்வு பெற்ற ஷேன் வார்ன் (41). கடந்த 2007ல் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற இவர், 708 விக்கெட்டுகள் வீழ்த்தி சாதித்துள்ளார். சமீபத்தில் ஐ.பி.எல்., உள்ளிட்ட அனைத்து போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்தார். தற்போது இவருக்கு மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில், வெண்கலச் சிலை வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக இந்த கிரிக்கெட் கிளப்பின் சிற்பி லூயிசை வார்ன் சந்தித்துள்ளார். இதற்கு முன் இங்கு பிராட்மேன், டெனிஸ் லில்லி உள்பட 10 வீரர்கள் சிலைகள் ஏற்கனவே வைக்கப்பட்டுள்ளது.

(PR)



# முத்திரை விலை அதிகரிக்கின்றது!

யூலை 1 முதல்
பிரான்சில் முத்திரை விலை
2 சதத்தால் அதிகரிக்கின்றது.

இனி, முத்திரையொன்றின்
விலை 60 cts.


**ஈவ்றி தமிழ் கலாசார மன்றத்தின்**
**5வது ஆண்டுவிழா**
**02. 07. 2011**



# பிரான்சின் பிறமாகாணங்களுக்கு இடம்பெயரும் பாரிஸ்மக்கள்!

பாரிசிலும் சுற்றுப்புற நகரங்களிலும் வாழ்கின்ற மக்கள் வாழ்க்கைச் செலவுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் உள்ளனர். இதன் காரணமாக பலர் பாரிஸ் மாகாணத்தில் இருந்து வெளியேறி மற்றைய மாகாணங்களுக்கு இடம்பெயர்கின்றனர். ஐந்து ஆண்டுகளில் 73000 பேர் வெளியேறியுள்ளனர் என பிரான்ஸ் தேசிய புள்ளி விபரத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

மக்களின் வெளியேற்றத்திற்கு வாழ்க்கைத் தரமே முக்கியகாரணியாக அமைகின்றது. இவர்களுள் வயதானவர்களும் குறைந்த அளவில் டிப்புளோமா கல்வியைக் கொண்டிருப்பவர்களும் கூடுதலாக அடங்குகின்றனர். அத்துடன் நல்ல பொழுதுபோக்குகளிற்காகவும் தூய்மையான காற்றைச்சுவாசிக்க தாங்கள் விரும்புவதாகவும் பலர் கூறுகின்றனர்.

மேலும் பாரிசில் பெரிய கடைகளுக்கு பொருட்கள் வாங்கச் செல்வோர் பெரும்பாலானோர் வாகனங்களை வைத்திருக்கவில்லை என்றும் அருகில் உள்ள கடைகளிலேயே அனேகமானோர் பொருட்களை வாங்குகின்றனர் என்றும் தெரிய வருகின்றது. தரமான வாழ்வு, தேவை என்ற எதிர்பார்ப்பே கடந்த பத்தாண்டுகளில் ஓர் குறிப்பிட்ட மக்களை பிற மாகாணங்களை நோக்கி இடம்பெயரத் தூண்டுகின்றது. இந்த நிலைமை பாரிஸ் மாகாணத்திற்கு பாதகமான விளைவையே ஏற்படுத்தும் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

(YB)

**வேலணை மத்திய மகாவித்தியாலயம்**

**பழைய மாணவர் சங்கம் – பிரெஞ்சுக்கிளை**

## அதிர்ஷ்டலாபச் சீட்டு பரிசுபெற்றவர்கள் – 2011

**பரிசுபெற்ற இலக்கங்கள்**

- 1வது பரிசு - 621
- 2வது பரிசு - 842
- 3வது பரிசு - 473
- **5 ஆறுதல் பரிசுகள்**

833, 892, 292, 919, 383

நெருக்கடி மிக்க வேளைதான் அதிகூடிய அனுபவத்தையும் அறிவையும் பெற்றுக்கொள்ளும் காலம்

- தலாய் லாமா




லாச்சப்பலில்

சங்கீதா அச்சகம்

39, Bd de la Chapelle

01 44 72 08 94

இந்திய விலைகளுக்கீடாக பெற்றுக்கொள்ளலாம்




## கடைசிவரை கண்ணாடி போடாமல் இருக்க விரும்புறீங்களா?

### அப்டிண்டா கரட் சாப்பிடுங்கோ!!

நாளாந்த உணவில் நிறையக்கரட்டை சேர்த்துக் கொண்டால் அதிகளவு விட்டமின் " ஏ " இனை பெறமுடியும்.

கரட்டில் "காரடீன்" என்கின்ற சிறப்புப்பொருள் இருக்கிறது. இதுவே விட்டமின் உண்டாவதற்குக் காரணமாக இருக்கிறது அதனால் தொற்று நோய் வராமல் விரட்டுகின்றது.

வயிற்றில் அமிலம் காரணமாகப் புளியேப்பம், பசி மந்தம் ஏற்படுகிறதா? அப்படியானால் கரட்டைத்துருவி பச்சடி போட்டுச்சாப்பிடுங்கள் அது நிவாரணமாகும்.

பச்சடி அடிக்கடி சாப்பிட்டுவர நீங்கள் அதிசயப்படும் விதம் இளைப்பீர்கள். கொழுப்பைக் குறைக்கும் சக்தி கரட்டின் தனித்தன்மை.

கிருமிகளை நாசம் செய்யும் சக்தி கரட்டுக்கு உண்டு.
இரத்தக்குறைவு காரணமாக சோகை ஏற்பட்டால் தொடர்ந்து தினம் கரட் சாப்பிட்டு வந்தால் புதிய இரத்தம் ஊறி சோகை நோய் நீங்கும். புதிய இரத்தத்தை உற்பத்தி செய்யும் சக்தி கரட்டுக்கு உண்டு.

சிறுநீர் சம்பந்தமான கோளாறுகளை நிவர்த்திசெய்யும் ஆற்றல் கரட்டுக்கு இருக்கிறது. சர்க்கரை நோய் உள்ளவர்கள் கரட் சாப்பிட்டால் நோய் கொஞ்சம் கட்டுப்படும்.
கரட் சருமத்தைப் பாதுகாத்து மென்மையாக வைத்திருக்கிறது.
கரட்டை பச்சை உணவாக உண்பதே சிறந்த பலனைக் கொடுக்கும். (PK)

## இப்படியும் நடக்கிறது!

பிரான்சின் 64ம் மாவட்டத்தில் உள்ள வாடகை குடியிருப்பாளர் ஒருவர் 18 சதம் (Centimes d'Euro) வாடகை நிலுவை செலுத்தப்படவில்லை என்று (ஹ)கூசியரிடம் (Hussier -அறவிடும் நபர்) சென்றுள்ளார்.

18 சதம் செலுத்தவில்லை என்று அறவிடும் நபர் வந்தபோது திகைத்து நின்ற குடியிருப்பாளர் மேலதிக செலவென 87 யூரோ 39 சதம் செலுத்த வேண்டும் என்று கேட்டபோது குடியிருப்பாளர் அதிர்ந்தே போனார்.

இச் சம்பவம் பிறெனே ( Pyrénées) மாகாணத்தில் உள்ள நூஸ்ரி (Nousty) என்ற இடத்தில் இடம் பெற்றுள்ளது.

(YB)



# பிரான்சின் முக்கிய நகரங்களில் வாகனங்களுக்குத் தடை!

2012ன் இலையுதிர்காலப் பிற்பகுதியிலும் அதனை அடுத்துள்ள 3 வருட காலப் பகுதிக்கும் நகர்ப் புறத்தினை அண்டிய பகுதிகளில் அதிக மாசு ஏற்படுத்தக் கூடிய வாகனங்கள் சட்ட ரீதியாகத் தடைசெய்யப்பட்டுள்ள தாக சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைச்சர் Nathalie Kosciusko-Morizet அறிவித்துள்ளார்.

இதற்கான பரிசோதனை பாரிஸ் (Paris), க்றெனோபிள் (Grenoble), நீஸ் (Nice), லியோன் (Lyon), போர்தோ (Bordeaux), ஆகிய மாநிலங்கள் உள்ளடங்கலாக 8 மாநிலங்களில் முதல் கட்ட நடவடிக்கையாக ஆரம்பிக்கப் படவுள்ளது.

வாகனப் பாவனையினைக் குறைப்பதன் மூலம் வளியின் தரத்தினை உயர்த்துவதோடு நகரத்தினை அண்டிய பகுதிகளில் வருடாந்தம் ஏற்படுகின்ற இளவயது இறப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுதலும் இதன் நோக்கமாகும். சுவீடனில் ஏற்கனவே இச் சட்டம் அமுலில் உள்ளது.

இப்புதிய சட்டத்தினால் 8 மில்லியன் கார்கள், 1.6 மில்லியன் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 300,000 ரக் வண்டிகள் என மொத்தமாக பத்து மில்லியன் வாகனங்கள் பாதிக்கப் படாலம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நகரப் புறத்தின் பொருளாதாரத்தினைப் பாதிக்காத வகையில் சில மானிய விதிவிலக்குகளை வழங்கலாம் எனவும் அமைச்சு மேலும் தெரிவிக்கிறது.

சட்டத்தை மீறுவோருக்கான தண்டப்பணமாக 68யூரோ வரை அறவிடப்படும்.

தடை செய்யப்பட இருக்கும் வாகனங்கள்

- பாவனையிலிருக்கும் 1997 ஒக்ரோபரிற்கு முற்பட்ட வாகனங்கள்.
- 30 யூன் 2004 இற்கு முற்பட்ட மோட்டார் சைக்கிள்கள்.
- 1997ஒக்ரோபரிற்கு முற்பட்ட தரம் 1 வாகனங்கள்
- 1998 ஒக்ரோபரிற்கு முற்பட்ட தரம் 2,
தரம் 3 வாகனங்கள்.
- 30 செப்ரம்பர் 2001இற்கு முற்பட்ட கனரக வாகனங்கள்.

- சியா



ஒடுக்கப்பட்ட ஆபிரிக்க மக்களின் குரலாக, ஓர் எழுச்சிக் கவிஞனாக அறியப்பட்டவர் தான் பாப் மார்லி.

எழுத்தாளர், பாடகர், இசையமைப்பாளர் என இசைத்துறையில் பல பரிமாணங்களில் கால் பதித்த ஜமேக்கா நாட்டைச்சேர்ந்த பாப் மார்லியின் பிரசுரிக்கப்படாத இன்ரவியூ அவர் இறந்து 30 வருடங்களின் பின் (VSD ல்) வெளியிடப்பட்டிருக்கிறது. 1981ம் ஆண்டு மே மாதம் இறந்த பாப் மார்லி 1978ம் ஆண்டு இந்த செவ்வியை வழங்கியிருந்தார். வெள்ளை பிரித்தானிய தந்தைக்கும், கருப்பு யமேக்க தாய்க்கும் 1945ல் பிறந்த மார்லி ரெகே இசைக்கலைஞர்களில் அதிகளவு அல்பங்களை விற்றவராவர். பாப் மார்லி த வெய்லர்ஸ் இசைக்குழுவின் தலைவராகவும் இருந்தார். இதனை விட ராஸ்தபாரி (rastafari) எனும் ஒரு புதுச்சமய இயக்கத்தின் ஒரு முக்கிய உறுப்பினராகவும் இருந்தார். இச்சமயம் எதியோப்பிய மன்னர் கைல் செலாசியை கடவுளின் அவதாரம் என நம்பி வழிபடும் ஒரு சமய இயக்கமாகும்.

(YS)




சரியான நேரங்களில் குறித்த அளவு நீரை முறையாக எடுப்பதன் மூலம் எமது உடலின் செயற்பாட்டுத்திறனை சீராக பேண முடிகின்றது.

**கீழ்க்காணும் வழிமுறையை நீங்களும் பின்பற்றி பயன்பெற முடியும்.**

✦ 2 கிளாஸ் நீர் காலை எழுந்தவுடன் குடித்தல். இது உங்களது உடல் செயற்பாட்டிற்கு வருவதற்கு உதவுகின்றது.

✦1 கிளாஸ் நீர் சாப்பிடுவதற்கு முன்னர் இது சமிபாட்டை இலகு படுத்துகின்றது.

✦சாப்பிட்டுகொண்டிருக்கும் சமயத்தில் ஒருபோதும் தண்ணீர் அருந்துவது சிறந்ததல்ல.

✦1 கிளாஸ் நீர் குளிப்பதற்கு முன்னர் குடித்தல். இது இரத்தஅழுத்தம் சீராக இருப்பதற்கு உதவுகின்றது.

✦1 கிளாஸ் நீர் நித்திரைக்கு முன் இது மாரடைப்பு, பக்கவாதம் என்பன ஏற்படுவதைத் தவிர்க்கிறது.

(PK)

**படித்தது - பிடித்தது**

வாழைமர தோரணங்கள் கட்டிய
கல்யாண மண்டபத்தின்
வாசலோரமாய்
நடக்கின்ற போதெல்லாம்
வெடிக்கிறது மனசு...

ஜன்னல் கம்பிகளில்
கன்னங்கள் தேய
வீட்டில் முதிர்கன்னி அக்கா..



(PK)



**சித்திரைமாத வெய்யில் . . .**

பிரான்ஸில் சித்திரை மாத சராசரி வெப்பநிலை 4°C ஆக இருந்தது. இது 2007 இலிருந்து படிப்படியாக அதிகரிக்க ஆரம்பித்திருக்கிறது. 2007ல் சித்திரை மாத சராசரி 4.3 °C ஆக இருந்தது. இவ்வருட நடுப்பகுதியில் வழமையை விட வெப்பநிலை அதிகரிக்கும் என பிரான்ஸ் காலநிலை அவதான நிலையம் எதிர்பார்க்கிறது.

(Mn)



# பிரெஞ்சுப்பாடசாலைகளில் பதில் ஆசிரியர் பற்றாக்குறை!

உந்தப்பிள்ளையள் எப்ப வீட்டவருகுது போகுது எண்டு தெரியேல்லை. கேட்டால் இண்டைக்கு புரொபசர் லீவு எண்ணுதுகள் என்று அநேக பெற்றோர் சலித்துக்கொள்வதைப் பாாத்திருக்கிறோம்.

பிரான்சில் 4வீதமான ஆசிரியர்கள் திடீர் விடுமுறை எடுக்கிறார்கள். இவர்களுக்கு பதில் ஆசிரியரைத் தேடுவதற்கு சில பாடசாலைகள் திண்டாடுகின்றன. இதனால் அந்த பாடவேளைகளில் பிள்ளைகளை வீட்டிற்கோ அல்லது நூலகத்திற்கோ செல்ல அனுமதிக்கிறார்கள். 2008-2009 பிரான்ஸ் முழுவதிற்குமான கணக்கெடுப்பின்படி 2 மில்லியன் மணித்தியாலங்கள் ஆசிரியப்பதிலீடுகள் செய்யப்படாமையால் வகுப்புக்கள் ரத்துச்செய்யப்பட்டிருக்கின்றன.

பள்ளிகளில் பதில்ஆசிரியர் போதியளவு இன்மைகுறித்து பிரெஞ்சு கல்வி அமைச்சர் Luc Chatel கருத்துதெரிவிக்கையில், Pole Emploi மூலமும், கல்வித்தகமையுடைய மாணவர் மூலமும், குறைந்த வயதில் ஓய்வூதியம் பெறுவோர் மூலமும் இதை நிவர்த்திசெய்லாம் என்கிறார். ஆனால் பெற்றோர் ஆசிரிய சங்கங்கள் இதற்கு உடன்படவில்லை. தரமற்றவர்களை ஆசிரியப்பணிக்கு அமர்த்தக்கூடாது என்று கடுமையான தொனியில் கருத்துரைக்கின்றன.

(Mn)

## தினமும் சிரிக்கப் பழகுங்கள்.

நாலு வயதுக் குழந்தை தினமும் சராசரியாக 500முறை சிரிக்கிறது. ஆனால் வளர்ந்து வாழ்க்கையை எதிர்கொள்ளத் தொடங்கியவுடன், நாம் தினமும் 15முறை சிரித்தாலே அதிகம். நம்பினால் நம்புங்கள், மனம்விட்டுச் சிரிப்பது ஹார்மோன்களைத் தூண்டிவிட்டு, உடலைச் சமநிலையில் வைத்திருக்க உதவுகிறது!

லாச்சப்பலில்

**சங்கீதா அச்சகம்**

39, Bd de la Chapelle

**மா**ணவ வன்முறை உலகின் எல்லா நாடுகளிலும்தான் நடைபெறுகிறது. இது பிரான்சுக்கும் விதிவிலக்கானதல்ல. இந்த மாணவ வன் முறையால் பாதிக்கப்படுவது பிஞ்சுமனங்கள் என்னும்போது, இவ் விடயம்பற்றி அக்கறை கொள்ளாமல் இருக்கமுடியாது என்கின்றனர் மனோவியலாளர்கள்.

27 வயதுடைய பிரெஞ்சுப் பெண் தனது அனுபவத்தை இவ்விதம் பகிர்ந்து கொள்கிறார். எனது சிறுவயதில் மிகவும் வறுமைப்பட்டேன். எனது குடும்பம் ஆடைகள் வாங்குவதற்கே மிகவும் சிரமப்பட்டது. இதனால் Secours catholique ல் இலவசமாக பெறக்கூடிய பழைய உடுப்புகளையே வாங்கி அணிந்துவந்தேன். இதை அவதானித்த என் சகமாணவர்கள் என்னைக் கேலி செய்தார்கள். அந்த வயதில் நான் அனுபவித்த மன உளைச்சல் சொல்லி மாளாது.

நான் 6è ம் படித்தபோது என்னை சகமாணவர் அடித்துத் துன்புறுத்தினர். வறுமை என்னை எதுவும் செய்யவிடவில்லை. நான் lycée படிக்கும்போதுதான் என்னால் அவர்களை எதிர்த்துப்பேச முடிந்தது. என்னையே நான் தைரியப்படுத்தும் துணிவு வந்தது என்கிறார்.



6 மாதத்திற்கு முன்பு பிரான்சில் இன்னொரு சம்பவமும் நடந்தது. 4ème படிக்கும் 13வயது மாணவன் அவன். அவனுக்கு சிறுவயதிலிருந்தே திக்குவாய். அவன் திக்கித்திக்கி கதைப்பதால் சகமாணவர்களின் இடையுறாத கேலிக்காளகி வந்தான். தாங்க முடியாத அச்சிறுவன் தற்கொலை செய்து கொண்டான். வழக்கு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

Face book இலும் இம் மாணவ வன்முறை தொடர்கிறது. இதைக் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வர தேசிய கல்வித் திணைக்களம் தீவிரமாக ஆலோசித் துவருகிறது.

(Mn)

# மசுக்குட்டி

அந்த விழாவிற்கு போவதென்று முடிவாயிற்று. ஆனால் காரில் போவதா அல்லது பஸ்ஸில் போவதா என்று குழம்பி பஸ்ஸில் போவதென்றே முடிவெடுத்தேன். காரைத் தவித்ததற்கு பலகாரணங்கள் உண்டு. அதில் முக்கியமானது, கந்தையா மாஸ்ரரும் விழாவுக்கு வரப்போகிறார் என்பதுதான்.

அவரிருக்கிறதெங்க, நான் இருக்கிறதெங்க. வயசுபோன நேரத்தில அந்தமனிசனை தனிய விடவும் ஏலாது. சொந்தக்காரனும் வேற. எப்பிடியும் வலியக்கேட்டு நான்தான் கொண்ட விடவேணும். பெற்றோல் விக்கிற விலையில இது தேவையா. சிவனே எண்டு கொமன் ரான்ஸ்போட்டில போய் அதிலயே வந்தால் அலுப்பில்லை எண்ட என்ர முடிவு ஞாயமாய்த்தான் பட்டுது.

விழா தொடங்கீட்டுது. மாஸ்ரரைக்காணேல்லை. கொஞ்சம் கவலையாயும் கிடந்திது.
இடைவேளை ரைம் கண்டிட்டன். நான் காரில வரேல்ல எண்ட துணிவு வேற. வலியப்போய் கதைச்சன்.
"எப்பிடி சுகமா இருக்கிறீங்களே?"
ம்..ம் எண்டு அனுங்கினார்.
"இந்தக்குளிருக்க என்னண்டு வந்தனியள் வீட்டிலயும் உங்களுக்கு தனிய இருக்க கஸ்ரமாயிருக்கும் எண்டு என்னை மறைச்சு நீட்டி முழங்கினன்."

"நீ என்ன காரிலதான் வந்தனியோ?"

ம்...நினைச்சன் கிழடு உந்தக்கேள்விலதான் வந்து நிக்குமெண்டு.
"இல்லை மாஸ்ரர். அதில ஒரு சின்னப்பிரச்சினை. வரேக்கயும் உங்கள நினைச்சனான். பாவம் என்னெண்டு வரப்போறியளெண்டு.."

நிகழ்ச்சி இடைவெளி விட்டு திரும்பவும் தொடங்கியது. நாடகம் எண்டு ஒண்டு போட்டார்கள். எனக்குப்பிடிக்கேல்ல. பரதம் தப்புத்தப்பாய் தாளம் பிசகியது. எல்லாமே ரசிக்கமுடியாமல் தான் இருந்தது.

நிகழ்ச்சி முடிந்து பஸ்பிடிக்கும் அவசரத்தில் ஓடினேன். டேய் தம்பி தம்பி என்ற குரல்கேட்டுத்திரும்பினேன். கந்தையா மாஸ்ரர்தான்.
என்னத்துக்கடா கிழவன் இப்பிடிக் கத்திது.

"என்ன மாஸ்ரர் "என்றபடி போனேன்.

"இல்லயடா என்ர பேரனைக்கூட்டிக்கொண்டு வந்தனான். புதுக்கார் எடுத்தவன். வா உன்னையும் அதில விட்டிட்டுப்போறன்" எண்டு பேரனைப்பார்த்தார்.
அவன் சந்தோசமாய் என் கைகளைப்பற்றினான்.
எனக்குள் ஏதோ ஊர்ந்தது.

- அசோகா

சின்னட்டிக்கதை



பிரான்சில் ஈபிள் கோபுரம் பற்றிய செய்திக்குப் பஞ்சமில்லை.
தினம் ஒரு செய்தி இருக்கும்.
அதிலும் குண்டுப்புரளி பற்றிய செய்தி அதிகம்.
இதில் இப்போது அகப்பட்டுக் கொண்டவன்
Noisy-le-grand ல் வசிக்கும் 23 வயது இளைஞனொருவன்.
இவன் ஈபிள் கோபுரத்திற்கு **குண்டுவைக்கப்போவது பற்றி பொய்யான தகவல் தெரிவித்த குற்றத்திற்காக கைதுசெய்யப்பட்டு 4 மாதம் கடுங்காவல் சிறைத்தண்டனை பெற்றுள்ளான்.**
அல்கொய்தா அமைப்பின் தலைவர் பென்லாடன் கொல்லப்பட்டதை அடுத்து ஈபிள் கோபுர பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. (Mn)

## விளம்பரம் ஒட்டாதீர்!

பிரான்சில் பொதுச்சுவர்களில் விளம்பரங்கள் ஒட்டக்கூடாது என்ற சட்டம் அமுலில் இருக்கிறது. இருந்தாலும் இதைக்கண்டும் காணாமலும் இருந்த பிரெஞ்சு ஆணையகம் இப்போது கடுமையான போக்கை கடைப்பிடிக்க ஆரம்பித்திருக்கிறது. அதிலும் குறிப்பாக பாரிஸ் 10 நகரநிர்வாகம் மேலும் இறுக்குகிறது. மீறி ஒட்டுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தும் வருகிறது.

---



## பிரெஞ்சு மக்களில் 61 வீதமானோர் மூன்றுவேளை சாப்பாட்டின் இடைவேளைகளில் நன்றாகவே நொறுக்குத்தீன் கொறிக்கிறார்கள்.

*Nutri net santé* இன் கணக்கெடுப்பின்படி பெண்களில் 65வீதமானோரும், ஆண்களில் 57வீதமானோரும் இதில் அடங்குகிறார்கள்.
இளையோர் மிக லாவகமாகவே ப்றிட்ஜ் ஐ திறந்து எடுத்துக்கொள்கிறார்கள்.

இதன் மூலம் 484 கலோரி அதாவது ஒரு நாள் தேவையின் கால்பங்குக்கு கூடுதலான கலோரியைப்பெறுகிறார்கள்.

இதன் பிற்பாடு டயற்றிங், ஜிம் என்று அலைவது தேவைதானா?
பிரெஞ்சு மக்களல்ல,
இது நாங்களும் தான் என்கிறீர்களா?
ஓகே. ஓகே. நடக்கட்டும் ! நடக்கட்டும் ! (Mn)


பாரிஸ் மாணிக்கவிநாயகர் 28.08.2011

16வது தேர்த்திருவிழா

பாரிசில் பாட்டுத்திறன் போட்டி



24.09.2011
பாடுவோரெல்லாம் பாடவரலாம்
தொடர்புகளுக்கு : 06 60 23 44 06

# TGV க்கு வயசு 30!




பிரான்சின் அதிகூடிய வேக தொடருந்துவண்டி 22 செப்ரெம்பர் 1981ல் தனது சேவையை தொடங்கியது. இந்த வருடம் தனது 30வது பிறந்தநாளை கொண்டாடுகிறது. 300கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் இவ்வண்டி ஆரம்பத்தில் எரிவாயுவின் மூலம்தான் இயங்க வைக்கப்பட்டது. இப்பொழுது மின்சாரத்தில் இயங்குகிறது. முதலாவது புகையிரத வண்டி பாரிஸில் இருந்து லியோன் (Lyon) க்கு சென்றது. இறுதியாக தற்பொழுது Strasbourg வரை செல்கின்றது. இந்தப் பிறந்தநாள் இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் வரை கொண்டாடப்படுகிறது. TGVயின் வரவால் வாடகை வீடுகளின் வாடகைப் பெறுமதி கூடியிருக்கின்றது. தூர இடங்களில் இருப்பவர்கள் இலகுவாக தங்கள் வேலையிடங்களுக்கு செல்லமுடியும். இதனால் தலைநகரில் வசித்த பலர் தலைநகரைவிட்டு வெளியே வசிக்கின்றார்கள். Marseille என்னும் இடத்தில் வீட்டு வாடகை ஒரு வருடத்தில் 143% அதிகரித்திருக்கின்றது.

- வரதன்

# Cauchemar en cuisine

## ‘சமையலறையில் கெட்டகனவு’






பிரெஞ்சுத் தொலைக்காட்சிக்கும் எமக்குமான பரீட்சயம் கொஞ்சம் குறைவுதான். நேரப்பிரச்சினை மட்டுமல்ல, மொழிப்பிரச்சினையும் அதற்குக் காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனாலும், இடையிடையே எமது கண்களில் தட்டுப்படும் நிகழ்ச்சிகள் சில எம்மையும்மீறி இருந்த இடத்தை விட்டு நகரவிடாது எம்மை அப்படியே ஒன்றிப்போகவைக்கின்றன.
அப்படி ஒரு நிகழ்ச்சிதான் *Cauchemar en cuisine .* இது சனல் w9ல் பிரதி திங்கள் தோறும் இரவு 8.30ற்கு ஒளிபரப்பாகிறது. தொழில்சார் அறிவு நிகழ்ச்சியிது.
உணவகத்தை (Restaurant) மையப்படுத்தி நடக்கும் நிகழ்ச்சியாயினும் இது எல்லாத் தொழில்களுக்கும் பொருந்தும். தொழிலைத்தொடங்கிவிட்டு நடத்தமுடியாது திண்டாடுபவர்களுக்கு ஆலோசனைதருகிறார் கோர்தொன் ராம்சே (Gordon Ramsay)

நிகழ்ச்சி இப்படித்தான் தொடர்கிறது.. தாங்கள் அதிகமான முதல் போட்டு தொடங்கிய ஒரு ரெஸ்ரோறன்ரை மூடி பெரிய நஸ்டத்தை சந்திக்க முடியாத இக்கட்டான சூழ்நிலையில் ராம்சே(Ramsay) ஐ தொடர்பு கொள்கிறார்கள் முதலாளிகள். இவர்களிடம் விஜயம் செய்யும் ராம்சே ரெஸ்ரோரண்டின் பின்னடைவிற்கான காரணங்களைக் கண்டறிந்து அதற்கான தீர்வுகளை முன்வைக்கிறார்.

பெயர்ப்பலகை முதல் பின் மூலையில் இருக்கும் ஸ்ரோர் றூம் வரை மாற்றங்களைக் கொண்டு வந்து எப்படி ஒரு ரெஸ்ரோறன்ற் முன்னேற்றமடைகிறது என்பதை காணும் போது ஒரு தொழிலில் உள்ள நெளிவு சுழிவுகளை இலகுவாக கற்றுக்கொள்ள முடிகிறது.
ரெஸ்ரோறன்ரின் பின்னடைவிற்குக் காரணம்,

- ⏭ விலைப்பிரச்சனையா?
- ⏭ வரவேற்புமுறையா?
- ⏭ வழங்கப்படும் உணவின் (menu) அளவா?
- ⏭ உணவின் சுவையா?
- ⏭ உணவு செய்ய உள்வாங்கப்படும் பொருளின் (இறைச்சி,மீன்,மரக்கறிகள்) தரமா?
- ⏭ உணவு(menu)வழங்கப்படுவதில் தாமதமா?
- ⏭ உணவகத்தின் கவர்ச்சித்தன்மையா?

என எல்லாப் பிரச்சினைகளையும் பலகோணங்களில் அலசுகிறார். அலசி ஆராய்ந்து புதுமெருகூட்டப்பட்ட ரெஸ்ரோறன்ரைப் பார்க்கும் போது எமக்கே ரெஸ்ரோறன்ற் ஒன்றுக்கு முதலாளி ஆகலாமா என ஆசை தோன்றுகிறது.
இந்நிகழ்ச்சி ரெஸ்ரோறன்ற் முதலாளிகளுக்கு மாத்திரமல்ல, எத்தொழிலை செய்பவர்களுக்கும், புதிதாக ஒரு தொழிலை தொடங்கப் போகிறவர்களுக்கும் தாராளமாகவே உதவுகிறது.

- யாழினி

### நீங்களுமா??

உலக நாணய நிதியத்தின் தலைவர் D.S கான் பாலியல் குற்றச்சாட்டில் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டபின்னர் எல்லா ஊடகங்களும் பரபரப்பாக செய்தி வெளியிட்டன.
இவர் கைது செய்யப்பட்டு முதல் வாரத்தில் பிரெஞ்சு மக்களில் 15 வயதிற்கு மேற்பட்டோர் சராசரியாக 136தரம் இவர் சம்பந்தமான செய்தியை செவிமடுத்துள்ளனர்.

(YB)




# Fête des Mères

La fête des mères est une fête célébrée pour honnorer et remercier sa mère. Pour cette occasion, on lui offre des cadeaux. Cette fête n'a pas lieu le même jour dans tout le monde. En France, comme à Madagascar ou à Monaco, on célèbre la fête des mères le dernier dimanche de mai ( si ce jour est le même que celui de la Pentecôte, on repousse la fête au premier dimanche de juin).Cette année, la fête des mère a eu lieu le 29 Mai, en 2012, elle aura lieu le 3 juin (alors préparez vos cadeaux dès maintenant!).

- Meera




- ***Maman***

*Maman tu es comme la mer .*
*L'amour de la mer est salé*
*Mais l'amour que tu me portes est sucré .*
*La Terre est apparue en première*
*Mais pour moi tu es apparue en première .*
*L'amour que je ressens pour toi est indéfinissable .*
*Maman tu vaux bien plus que dieu .*
*La fête des mères ne sert à rien*
*Car je t'éprouve mon amour tous les jours .*

**- Varani Karunanithi**
*(Pantin)*







***Maman je te dit***

*Chaque jour que je la vois,*
*A tout moment,*
*Elle me surveille et me protège*
*J'ai l'impression d'être une princesse.*
*Elle est belle et gentille.*
*C'est une merveille.*
*Qui est-ce?*
*C'est ma maman.*

*- **Maanuja Sutharsan** (CM1)*
*(Villejuif)*






*Douce et gentille,*
*Ma chère maman,*
*Je ne t'oublierai jamais.*
*Tu resteras toujours dans mon coeur,*
*Entourée de bonheur.*
*Je sais que tu as une vie difficile,*
*Et je fais tout pour te la rendre plus facile.*
*Je ne sais pas si un simple «merci» suffira*
*Pour toutes les épreuves*
*que tu as dû traverser pour moi.*
*Maman n'oublies pas :*
*Tu es la meilleure des mères qui soient.*

*- Meera Manoharan*
*(4ème) Blanc-Mesnil*



De ton affection je ne peux me surpasser
Oh! Ma lumière qui jaillit...
Dans mes jours et mes nuits
De ton amour est née ma personnalité
Ma Maman chérie je te dois un grand merci
Toi qui t'es toujours privée pour me tout donner
Toi qui a supporté tous mes cris, tous mes bruits
Sache que je t'ai toujours aimé
aujourd'hui je t'aime et demain encore je t'aimerai
Ma maman cherie je te dois un grand merci
Tu es le fruit de ma vie ...
Jamais je ne cesserai de t'aimer c'est promis ...!

***- Abinaya Thambirajah***
*(4ème) Blanc-Mesnil*



# பிரெஞ்சு ஜனாதிபதி ஆகும் வாய்ப்பை இழந்த
## சர்வதேச நாணய நிதிய தலைவர்

அமெரிக்காவில் பெரும்புள்ளிகள் தங்கும் ஸொவிற்றெல் விடுதியில் தங்கியிருந்த சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் டொமினிக் ஸ்ரோஸ்கான் அறைப் பணிப்பெண்ணை வல்லுறவுக்கு உட்படுத்தினார் எனும் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட செய்தி உலகத்தில் பெரிய செய்தியாக இன்று வரை உலவுகிறது. பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாக முறையிட்டவர் 32 வயதுடைய கினியா நாட்டு இஸ்லாமியப் பெண். இவருக்கு பதினைந்து வயதான ஒரு மகன் உண்டு. 62 வயதான ஸ்ரோஸ்கான் தன்னை வல்லுறவுக்கு உட்படுத்த தன் உடற்பலத்தை பிரயோகித்திருக்கிறார் என ஆபிரிக்க இளம்பெண் பொலிசில் முறைப்பாடு செய்திருக்கிறார், இவர் கைது செய்யப்பட்டு, பொலிசாரினால் மின்னியல் வளையல் மாட்டப்பட்டு, இவர் செலவிலேயே வீட்டுக்காவலில் விசாரணை முடியும் வரை வைக்கப்பட்டிருக்கும் விடயமானது பெருத்த கிலிசகேட்டுக்கு உரியதாக தினமும் பிரான்சில் அனைத்து ஊடகங்களிலும் பேசப்பட்டு வருகிறது. இப்பரபரப்பான செய்தி சில பேருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் பலபேருக்கு அதிர்ச்சியையே ஏற்படுத்தியிருக்கிறது. ஏனெனில், உலகப்பொருளாதாரத்திலும் பிரெஞ்சிய அரசியலிலும் மிகச்செல்வாக்கான பெரும் மனிதராக வலம் வந்த ஸ்ரோஸ்கான் இப்படியான ஓர் கீழ்நிலைக்கு ஆளாகியிருக்கிறார் அல்லது ஆளாக்கப்பட்டிருக்கிறார். அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் பிரெஞ்சிய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உள்ள வேட்பாளர்களில் வெற்றிவாய்ப்பைப் பெறக்கூடிய முன்னிலையில் கருத்துக்கணிப்புப் பிரகாரம் செல்வாக்கானவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மூன்று முறை திருமணமாகி, இரண்டு தடவைகள் சோஸலிஷ ஆட்சியில் முக்கிய மந்திரியாக இருந்த ஸ்ரோஸ்கானுக்கு இவ்வழக்கினால் இலட்சக்கணக்கான டொலர் செலவு ஏற்படப்போகிறது. தற்போது ஐந்து மில்லியன் டொலர் சொத்துப் பிணையும் ஒரு மில்லியன் டொலர் பிணையும் செலுத்தி சிறையிலிருந்து விடுதலையாகி, தன்சொந்தச் செலவில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் இவரின் குற்றம் ஊர்ஜிதம் செய்யப்படுமிடத்து குறைந்தது 20 ஆண்டுகள் சிறையில் இடப்படுவார் என தெரியவருகிறது. இதேசமயம் அப்பெண்ணுக்கு ஒரு பெரிய தொகை நஷ்டஈடு கொடுத்து இவரை வழக்கிலிருந்து விடுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் செய்திகள் உண்டு. இவ்வாறே தேர்தலில் ஜெயிக்கக்கூடிய சோஸலிஷக்கட்சி வேட்பாளரை சாக்கடையில் விழுத்தி அரசியல் வாழ்க்கையை அஸ்தமிக்கச் செய்வதற்காக அப்பெண்ணுக்கு ஒரு கணிசமான டொலர்கள் கொடுத்துத் தான் இச்சதி செய்யப்பட்டதாக கூறும் செய்திகளும் நிலவுகின்றன.

இந்த நிகழ்வின் தாக்கங்களையும் எதிர்விளைவுகளையும் சர்வதேச நாணய நிதிய தலைவரின் படங் களையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் விவேக் சொன்ன " எப்படியோ இருந்த நான் இப்படியா ஆயிட்டனே " என்ற காமெடி நினைவுக்கு வரவில்லையா உங்களுக்கு? இவ்வாறான துர்ப்பாக்கிய சூழ்நிலையிருந்து மீள இன்னொரு சில்வியோ பெருலொஸ்கோனியா இவர்.

( எஸ். எஸ்)




# வீதியோர கண்காணிப்பு கமரா
# முன்அறிவிப்பு பலகைகள் அகற்றப்படுகின்றன!

பெரு வீதிகளில் செல்லும் வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்துமுகமாக பிரான்ஸ் வீதி ஓரங்களில் பல கண் காணிப்புக் கமராக்கள் பொருத்தப் பட்டுள்ளன. .

வேகத்தடையை மீறிச்செல்பவர்கள் கூட கண்காணிப்புக் கமராக்கள் இருப்பதைக் காட்டும் பலகைகளைக் கண்டவுடன் வாகனங்களின் வேகத்தைக் குறைக் கின்றனர். சாரதிகள் துஸ்பிரயோகம் செய்வதாலும் கட்டுப்பாட்டு வேகத்தை மீறுவதாலும் பல விபத்துக்கள் ஏற்படுகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.


இதன் காரணமாக கமராக்கள் பொருத்தப்பட்டுள்ள இடங்களைக் காட்டும் பலகைகளை நீக்க பிரான்சின் வாகனப் போக்குவரத்து பாதுகாப்புப் பிரிவு முடிவு செய்துள்ளது. இதற்கிணங்க மே மாதம் முதற்கிழமை கமராக்கள் பொருத்தப்பட்டுள்ள இடங்களைக் காட்டும் பலகைகளை அகற்றும் வேலைகள் ஆரம்பமாகி யுள்ளன. கருத்துக் கணிப்பொன்றின்படி 65 வீதமான சாரதிகள் இந்நடவடிக் கைக்கு தங்கள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

2010ம் ஆண்டில் 1740 கமராக்களில் வேகக் கட்டுப்பாட்டை மீறிச் சென்றவர்களிடம் 46 இலட்சம் யூரோக்கள் தண்டப் பணமாகப் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே ஆண்டு 12727 வாகனங்கள் வேகக் கட்டுப்பாட்டை மீறி ஓடியுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாகன விபத்துக்களைக் குறைக்கவும் சாரதிகளின் வேகக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கவுமே இந் நடவடிக்கை எடுக்கப்படுவதாகப் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

(YB)

எல்லா நல்ல மனிதர்களும் உலகத்திற்கு தகுந்தபடி தங்களை மாற்றிக் கொள்கிறார்கள். ஒரு சில முரண்பட்ட மனிதர்கள் மட்டுமே, தங்களுக்கு ஏற்றபடி உலகத்தை மாற்றியமைப்பதில் சளைக்காமல் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். உலகத்தின் எல்லாவித முன்னேற்றங்களும் இப்படிப்பட்ட முரண்பட்ட நபர்களையும், அவர்களின் புதுமைக் கண்ணோட்டத்தையும்தான் நம்பி இருக்கின்றன.



- பெர்னாட்ஷா-
1856-1950

## 5. இங்கிலீஷ் - ஆங்கிலம் எப்படி வந்தது? இங்கிலீஷ் - ஆங்கிலம் எப்படி வந்தது?

ஆங்கிலம் அங்குலுய்ஸ் **(angulus)** எனும் இடத்திலிருந்து வடகடல் கடந்துவந்த ஆங்கில் **(angle)** எனும் ஜெர்மனிய இனக்குழுவினரால் ஐந்தாம் நூற்றாண்டுப்பகுதியில் பிரித்தானியத்தீவுக்கு கொண்டுவரப்பட்ட மொழி ரோமானியச் சாம்ராஜ்யம் உடையத்தொடங்கியதும், பிரித்தானியாவை விட்டு ரோமானியர்கள் போன பின்னர் பிரித்தானியாவைப் பிடிக்க எதிரிகள் வந்தார்கள். இவர்களின் இடையறாத தாக்குதல்களிலிருந்து தீவைக் காப்பாற்றுவதற்காக பாதுகாப்புக்காக அழைக்கப்பட்டவர்களே பலம்வாய்ந்த ஆங்கில் இனக்குழுவினர். ஆனால் பிரித்தானியர்களின் கோழைத்தனத்தை சாதகமாகப் பயன்கொண்டு இவ்வினக்குழுவினரின் அயலவர்களான சாக்ஸன் **(Saxons)** , ஜுற்ஸ் **(Jutes)** , /ப்றிஸியன் **(Frisians)** ஆகிய குழுவினர்களும் குடியேறி தீவை தமதாக்கிக்கொண்டனர். இந்நான்கு மேற்கு- ஜெர்மனிய **(West Germanic)** இனக்குழுவினர்களினதும் மொழி, பண்பாடு நெருங்கியதாக இருந்தமையால் இவர்கள் தம்மை இங்கில் **(angle)** என அழைக்கப்பட உடன்பட்டனர். எனவே இவர்களின் நாடாக்கப்பட்ட பிரித்தானியாவின் பகுதி இங்கில் லான்ட் **-Engla land** என பெயரிடப்பட்டது. இதுவே இங்கிலாந்து- **England** ஆனது. இவ்வாறே இவர்களின் மொழியும் இங்கிலிஷ்க் - **englisc** என்றாகி பின்னர் இங்கிலீஷ் - **English** ஆக நிலைத்தது.

**Engla land < England Englisc < English.**

இதனை ஒட்டித்தான் ஆங்கிலம் என்றும் இங்கிலீஷ் என்றும் **English** க்கு தமிழ்ப்பெயர் வந்தது. இந்நாளில் தமிழும் ஆங்கிலமும் கலந்து பேசுகிற மொழி தமிங்கிலீஷ் எனவும் தமிங்கிலம் எனவும் புதுச்சொல்லாடல்கள் புனையப்பட்டிருக்கின்றன. ஆங்கிலம் எனும் சொற்பிரயோகத்திற்கு முன் இங்கிலீஷ் எனும் சொல் பயன்பாட்டிற்கு வந்து விட்டதென்பதற்கு 1770 இல் வெளிவந்த முதல் தமிழ் - ***ஆங்கில அகராதியான தமிழும் இங்கிலேசுமாயிருக்கிற (பெப்ரிஷிய) அகராதி*** சான்றாகும்.

## 6. 9 வது உலகத் தமிழாசிரியர் மாநாடு - 2011

உலகத் தமிழாசிரியர் மாநாடு
9th World Tamil Teachers' Conference
2011 - Singapore

சிங்கப்பூரில் நடைபெறுகிறது. இம்மாநாடு செப்ரெம்பர் 8 -10 திகதிகளில் இடம்பெறுகிறது. இங்கு உலகமயமாதலும் தமிழ் கற்றல் கற்பித்தலும் என்கிற கருப்பொருள் ஆராயப்படும். இதனை சிங்கப்பூர் தமிழாசிரியர் சங்கம் ஏற்பாடு செய்கிறது. இச்சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்படும் மூன்றாவது மாநாடு இதுவாகும்.

## 7. நமக்கு வரும் கோபம் தவறானதா?

இல்லை என்று சொல்லலாமா? அல்லது சரி என்று சொல்லலாமா? அன்றாட வாழ்வில் கோபம் எல்லாருக்கும் ஏற்படுவது இயல்புதான். ஒருவருக்கொருவர் பழகும் போது கோபம் வருவது இயற்கையானது தான். பல சூழ்நிலைகளைக் கோபம் தான் சமாளிக்கிறது.

- கோபம் ஆரோக்கியமானது தான். ஏதோ ஒன்று தவறாக இருக்கிறது என்ற முன்னறிவிப்பைக் கோபம் மூளைக்கு அனுப்புகிறது. நிலைமையைச் சரிசெய்ய அட்ரிலினைச் சுரந்து உடம்புக்கு தேவையான எதிர்ப்புச் சக்தியை அளிக்கிறது.
- நிலைமைக்கு தக்கவாறு மாறிக்கொள்ளும் தனித்தன்மை கோபத்திற்கு உண்டு. எதிர்த்துச் செயல்புரிவதற்கு ஏற்ற சக்தியை கோபம் வழங்கும்.
- மனஅழுத்தத்தைத் தளர்த்துவதற்கு கோபம்தான் தலைசிறந்த மருந்து. தவறுகளைத் திருத்துவதற்கு சரியான ஆயுதம்.
- ஆற்றல் பெறவும், வேகம் பெறவும் வெற்றி காணவும் கோபம் துணைபுரிகிறது.
- கோபம் ஏற்படுவது தவறானது அல்ல என்றாலும், கோபத்தை எப்படி வெளிப்படுத்துகிறோம் என்பதில்தான் ஒருவரின் சாமர்த்தியமே அடங்கி இருக்கிறது.
- சமூகப் புரட்சிக்கு கோபம் தான் வித்திட்டிருக்கிறது என்பதை வரலாறு காட்டுகிறது. ஆகவே மாற்றத்தைச் சமூகத்தில் உருவாக்க கோபம் ஒரு நல்ல காரணமாக அமைகிறது.


நிலா

நிலாவினைப் பெற்றுக்கொள்ள

**சங்கீதா அச்சகம்**
39, Bld de la Chapelle - 75010 PARIS

**ரூபி அச்சகம்**
10, Rue Labat - 75018 PARIS

**MAGENTA**
77, Bld. de Magenta - 75010 PARIS

**ASI BOUCHERIE**
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**VANNI BOUCHERIE**
26, Rue Perdonnet - 75010 PARIS

**Sachi Education**
70, rue Philippe de Girard - 75018 PARIS

**NRS Coiffure**
5B, Avenue Alexis Varagne - 95400 Villiers le Bel

**மாலா மளிகை**
4, Place de Salengro - Garges les Gonesse - Sarcelles

**SHAMROCK EDUCATION CENTRE**
M°: St. François Xavier (13) - M°: Montparnasse (4,12) அருகாமையில்

**கிருஷ்ணா அச்சகம்**
73, Rue Doudeauville - 75018 Paris



**அண்ணாமலை பல்கலைக் கழகம்**

± க.பொ.த. உயர்தர சித்தியோ அல்லது சான்றிதழோ இல்லாதவர்கள்
இளங்கலைப் பல்கலைக்கழகப் பட்டம்
உள்ளவர்களாக உயர்வு தரும் இறுதி வாய்ப்பு.
இளங்கலைப் பட்டங்கள் - Under Graduates : B.A., B.Sc., B.Com., B.B.A., B.C.A.. B.B.S...
புத்தகங்கள் கையில் «பரீட்சைகள் தையில்»
ஐரோப்பாவில் முதன் முதல் பரதநாட்டியம், இசைத் துறையில்
பல்கலைக்கழகப் பட்டப்படிப்புக்கள்
பட்டங்கள் - Graduates: B. பரதநாட்டியம், M. பரதநாட்டியம்.
Dip in பரதநாட்டியம், C in பரதநாட்டியம்,
B.Music, M. Music, Dip in Music, C in Music.
பரதநாட்டியம், இசைத் துறையில் முறைசார் கற்கை.

**Sachchi Education ( Annamalai University)**
70, rue Philippe Girard - 75018 Paris **Tél. : 01 46 07 16 00 / 01 60 28 39 12**

*Pub.*

## 1. *Fête du pain français*




**பிரெஞ்சுப் பாண் கொண்டாட்டம்**

98 % மான பிரெஞ்சுக்காரர்களின் உணவில் தவறாமல் இருப்பது (Pain) பாண். பாண் வகைகளில் பக்கேத் (baguette) எனப்படும் மெல்லிய பாண் (ரொட்டி) பிரான்ஸ் நாட்டின் பாரம்பரிய தேசிய சொத்துக்களில் ஒன்று. பல நூற்றாண்டுகளாக பிரெஞ்சியர்களின் பாரம்பரியமாக விளங்கும் அடையாளங்களில் ஒன்று. Pain, baquette, batard என பலவகையான பாண் வகைகள் பிரான்சில் உண்டு.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஒருவரால் நாளொன்றுக்கு அரைக் கிலோவிலிருந்து ஒன்றரைக் கிலோ வரை உட்கொள்ளப்பட்ட பாண் இருபதாம் நூற்றாண்டில் 600 கிராமாகக் குறைந்து, உடம்பு பெருக்க வைக்கிறது என்கிற காரணத்தினாலும் இன்று 136 கிராமாக இறங்கிவிட்டது. பிரதான உணவின் கூட்டாளியாக பங்கெடுக்கும் பக்கேத் வருடமொன்றில் 10 கோடி உட்கொள்ளப்படுகிறது. Fête du pain - பாண் கொண்டாட்டம் ஒவ்வோர் ஆண்டும் மே மாதத்தில் பிரான்சில் 33 000 பேக்கரிக்காரர்களால் (boulangers) கொண்டாடப்பட்டு வருகிறது.

இலங்கைத்தமிழில் பாண் எனவும், இந்தியத்தமிழில் ரொட்டி எனவும் அழைக்கப்படுகிறது. இந்த இருசொற்களும் தமிழ்ச்சொற்கள் அல்ல. பாண் போர்த்துக்கேயச்சொல், ரொட்டி இந்திச்சொல். செவ்வப்பம், திரளப்பம் என்பன இந்தியாவிலும், வெதும்பி என்பது ஈழத்தமிழிலும் இதற்குரிய நல்ல தமிழ்ச்சொற்களாக வழங்கப்படுகின்றன.



# தேன்கூடு

பேராசிரியர் ச. சச்சிதானந்தம்

## பதிவுகள்

## 2. மனைவி பிள்ளைகளை உறக்கத்தில் கொலை செய்து புதைத்தவர் தலைமறைவு

இரத்தத்தை உறையச்செய்யும் குடும்பக்கொலைகளைச் செய்து தலைமறைவான ஒரு குடும்பத்தலைவனைத் தேடும் பிரெஞ்சியப் பொலிசாரின் தேடுதல் வேட்டை இன்று வரை பலனளிக்கவில்லை. இத்துயரச்சம்பவம் நந்தில் ஏப்ரல் முதல் வாரத்தில் நடந்தது. 50 வயதுடைய சாவியே தூய்பொன் என்பவன் தனது மனைவி அனியெஸ் - 48வயது, மூத்தமகன் ஆர்துய்ர் -21வயது, இளையமகன் தோமா -18வயது, ஏகபுதல்வி ஆன் -16வயது, கடைசிமகன் பெனுஆ -13 வயது ஆகிய ஐவர்களும் நித்திரையில் இருந்த போது துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற பின்னர் வீட்டுக்காணியிலே புதைத்து விட்டு தலைமறைவாகி விட்டான். இவர்களுடன் வளர்த்த நாயையும் கொன்று புதைத்திருக்கிறான்.

ஐந்து சடலங்களையும் நாயையும் பொலிசார் வெளியே எடுத்து பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். சாப்பாட்டில் தூக்கமருந்தைக் கலந்து கொடுத்து, அவர்கள் தூக்கநிலையில் இருந்த வேளையிலேயே சுட்டுக்கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏப்ரல் முதல் வாரத்தில் கொலை செய்யப்பட்டவர்களின் சடலங்கள் மே மூன்றாம் வாரத்தில் கத்தோலிக்க முறைப்படி புதைக்கப் பட்டிருக்கின்றன.



## 3. மானிடத்திற்கு எதிரான குற்றம் ! பிரான்ஸ் ஜனாதிபதிக்கு எதிராக இரு பிரபல பிரெஞ்சு வழக்கறிஞர்கள்

## வழக்குத் தாக்கல்



லிபியாவில் நேட்டோ படைகள் குண்டுமழை பொழிந்து பொதுமக்களை கொல்வது மானிடத்திற்கு எதிரான குற்றம் எனும் குற்றச்சாட்டில் பிரெஞ்சிய ஜனாதிபதி நிக்கொலா சார்க்கோசிக்கு எதிராக பிரெஞ்சு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக இரு பெரும் வழக்கறிஞர்கள் தெரிவித்திருக்கிறார்கள். கடந்த 19 ந் திகதியிலிருந்து பிரான்ஸ் முன்னெடுப்பில் நேட்டோ கூட்டுப்படைகள் லிபியாவில் முஅம்மர் கடாபியின் ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழுந்த புரட்சியாளாகளுக்கு கைகொடுத்து விமானத்தாக்குதல் நடத்தி வருகிறார்கள் என Roland Dumas, Jacques Vergès ஆகிய பிரபல முதுவழக்கறிஞர்கள் கூறும் செய்திகள் L' Express சஞ்சிகையில் வெளியாகியிருக்கின்றன.

## 4. புலம்பெயர்ந்தோர் தமிழ்க்கல்வி மாநாடு - 2012

புலம்பெயர்ந்தோர் தமிழ்க்கல்வி மாநாடு -2012 Diaspora Tamil Education Conference ___ 2012 எனும் ஒரு மாநாட்டை கலி/போர்ணியா தமிழ்அகடமி-California Tamil Academy (CTA) சான்பிரான்ஸிஸ்கோவில் சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடுசெய்து வருகிறது. இத்தமிழ்க்கல்வி மாநாடு அடுத்த ஆண்டு ஜுன் மாதம் 8,9,10 ஆகிய மூன்று நாட்கள் நடைபெறுகிறது.

- தமிழ்க் கல்விக்கான கருவிகள், உத்திகள், தொழில்நுட்பங்கள்
- பயன்மிக்க பாடத்தொகுப்புகளும் திட்டங்களும்
- தமிழ்க் கல்வியில் கலை, சமூகம், கலாச்சாரத்தாக்கங்கள்
- தமிழ்க் கல்விக்கான வலையமைப்பு உருவாக்கம்

ஆகிய பொருண்மைகள் தொடர்பான ஆய்வுகள் இடம்பெறும்.



# மழை பொய்த்துப்போனதால் வரட்சியை எதிர்நோக்கும் பிரான்ஸ்

சித்திரை மாதத்து கத்திரி வெய்யிலைத் தொடர்ந்து பிரான்சிலும் கடுமையான வரட்சி ஏற்பட்டுள்ளது. பிரான்சின் 101 மாவட்டங் களில் வடபகுதியில் உள்ள 17 மாவட்டங்கள் வரட்சியினால் பாதிக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிரான்சின் வடபகுதியில் வைகாசி மாத ஆரம்பத்தில் வெப்பநிலை 30° C ஐ எட்டியது. இது 100 வருடங்களில் ஏற்பட்ட அதிகூடிய வெப்பநிலையாகு மென தெரிவிக்கப்பட்டுள்ளது. வழமையாக பிரான்சின் தென் பகுதிகளிலேயே கூடுதலான வெப்பநிலை இருப்பது வழக்கம். ஆபிரிக்காவின் வடபகுதியில் இருந்து மத்தியதரைக்கடல் ஊடாக வீசும் வெப்பக் காற்றின் காரணமாகவே பிரான்சின் தென்பகுதியில் கூடிய வெப்பம் ஏற்படுவது வழக்கம். ஆனால் இம்முறை வெப்பமும் வரட்சியும் பிரான்சின் வடபகுதிவரை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக தனியார் நீச்சல் குளங்களுக்கு நீர் நிரப்பவும் புல்வெளிகளிற்கு இயந்திரங்களினால் தண்ணீர் தெளிக்கவும் தடை விதிக்கப் பட்டுள்ளது. மழை பொய்த்துப் போனதால் பிரான்சின் வடபகுதியின் விவசாயம் கடுமையான பாதிப்பிற்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சில விவசாயிகள் 50 வீதமான உற்பத்தி பாதிக்கப்படும் சூழ்நிலை உள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

1976ம் ஆண்டிலும் இது போன்ற வரட்சி ஏற்பட்டது. கடந்த 100 ஆண்டுகளில் பிரான்சில் ஏற்பட்ட முக்கிய வரட்சியாகவும், நெருக்கடி நிலையாகவும் இவ்வாண்டு கணிக்கப்படுகின்றது. (YB)



## பிரெஞ்சு நாட்டின் முதல் பெண்மணி தாயாகிறார்!

பிரெஞ்சு ஜனாதிபதி சார்கோசி - கர்லா புருனி(Carla Bruni) தம்பதியினருக்கு ஆண்குழந்தை பிறக்கவுள்ளது. இவ்வருட ஆரம்பத்தில் இருந்து கர்லா கர்ப்பிணியாக உள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சார்க்கோசிக்கு ஏற்கனவே பியர் (Pierre), ஜீன் (Jean), லுாயிஸ் (Louis) என மூன்று ஆண்குழந்தைகள் உள்ளனர். இவருக்கு நான்காவது ஆண்குழந்தை இன்னும் சில மாதங்களில் கிடைக்கவுள்ளது.

திருமதி சார்கோசி - கார்லாவுக்கு ஏற்கனவே ஒரு ஆண்குழந்தை உள்ளது. தற்போது கிடைக்கவிருக்கும் குழந்தை இரண்டாவது குழந்தையாகும். (YB)

## யூலை முதல் விலை உயர்கிறது!



வருடம் தோறும் வழமையாக அதிகரித்து வரும் போக்குவரத்து கட்டணம் இந்த வருடத்தையும் தப்பவிடவில்லை. யூலை முதலாம் திகதியிலிருந்து புதிய கட்டணங்கள் அமுலுக்கு வரவிருக்கின்றன.

| | | |
|---|---|---|
| 1-2 Zone | 60,40யூரோ | 62,00யூரோ |
| 1-3 Zone | 78,20யூரோ | 80,30யூரோ |
| 1-4 Zone | 95,50யூரோ | 98,10யூரோ |
| 1-5 Zone | 109,90யூரோ | 109,90யூரோ |

(இவ்விலையில் மற்றம் ஏற்படவில்லை).

ticket T+ (bus, métro, tramway), 1, 70யூரோ இவ்விலையிலும் மாற்றம் ஏற்படவில்லை. எனினும் கார்னே ரிக்கற் (Carnet ticket) இன் விலை 50சென்ரிமால் அதிகரித்து 12,50 யூரோவாகின்றது. (YS)




லாச்சப்பலில் சங்கீதா அச்சகம்

திருமண, பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள், வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும் நாடுங்கள்!

Tél./Fax : 01 44 72 08 94

E-mail: sangeethafrance@yahoo.com




39 Bd de la Chapelle
75010 Paris
M°: LA CHAPELLE